அனுப்புநர்:

திரு. கி.பாலசுப்பரமணியம், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர்.

பெறுநர்:

இயக்குநர்
பேரிடர் மேலாண்மை, தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை குறைப்பு முகமை,
சென்னை.

ந.க.ஆ1/ 3263/2022, நாள்: 26.02.2022

அய்யா,

பொருள்: பேரிடர் மேலாண்மை - ஆப்தமித்ரா-கடலூர் மாவட்டம் - தேசிய பேரிடர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளித்தல் - WASH என்கிற தொண்டு நிறுவனம் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - அறிக்கை அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை : இயக்குநர், பேரிடர் மேலாண்மை, தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை குறைப்பு முகமை, சென்னை அவர்களின் கடித எண்: NCIII(1)/5968/2019, நாள் : 01.02.2022.

******

"ஆப்தமித்ரா" திட்டத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் உள்ள தன்னார்வலர்களுக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி அளிப்பது தொடர்பாக கடலூர் மாவட்டம் வடலூரில் இயங்கி வரும் WASH என்கிற தொண்டு நிறுவனத்தினரால் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பயிற்சி மையத்தினை இன்று 25.02.2022 பிற்பகல் 3.00 மணியளவில், மாவட்ட ஆட்சியர் அலுவலக பேரிடர் மேலாண்மை பிரிவு வட்டாட்சியரால் நேரில் சென்று புலப்பார்வையிடப்பட்டது.

மேற்படி பயிற்சி மையம், கடலூர்-விருத்தாசலம் சாலை வடலூரில் அமைந்துள்ளது. இந்நிறுவனம் தனியார் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இப்பயிற்சி மையத்தில் 30 தன்னார்வலர்கள் பயிற்சி அளிக்க இடவசதி, இருக்கை வசதி, செய்முறை பயிற்சி, பயிற்சி உபகரணங்கள், தங்கும் வசதி போன்றவை இருப்பதாக மேற்படி பயிற்சி நிறுவனத்தின் உரிமையாளர் சரிபார்ப்பு பட்டியலில் தெரிவித்து கையொப்பமிட்டுள்ளார். ஆனால் நேரில் புலப்பார்வையிட்டபோது 30 தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்க இடவசதி இருந்தாலும், சரிபார்ப்பு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்சம் 12 அறைகள் இல்லை. மேலும் 30 தன்னார்வலர்கள் ஒரே நேரத்தில் தங்கி பயில்வதற்கு (Residential Training) போதுமான இடவசதி மற்றும் சமையல் அறை, கட்டில், குளித்தல்/கழிவறை (ஆண்/பெண்) வசதி போன்றவை போதுமானதாக இல்லை. மேலும், செய்முறை பயிற்சி அறை, நீச்சல் குளம் போன்ற வசதி தற்போதுள்ள பயிற்சி மையத்தில் இல்லை, இருப்பினும் வேறொரு இடத்தில் பயிற்சி நடத்த முடியும் என புலப்பார்வையின் போது உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி மையத்தின் உரிமையாளர் தங்கள் பயிற்சி மையத்தின் மூலம் பல பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து, சம்மந்தப்பட்ட முகமை அளித்துள்ள பாராட்டு சான்றுகளை சமர்ப்பித்துள்ளார். அதன் நகல் இத்துடன் இணைத்தனுப்பப்பட்டுள்ளது.

எனவே, வட்டாட்சியரின் நேரடி புலப்பார்வையின்படி, வடலூரில் இயங்கி வரும் WASH என்ற பயிற்சி மையத்தில் 30 தன்னார்வலர்கள் தங்கி பயிற்சி (Residential Training) அளிப்பதற்கு போதிய இடவசதி இல்லை, இருப்பினும் மேற்படி உரிமையாளர் பேரிடர் மேலாண்மை பயிற்சிகள் நடத்தியதற்கான சான்றுகள் அளித்துள்ளதன் அடிப்படையில் இவ்விடத்தை தவிர்த்து பேரிடர் மேலாண்மை பயிற்சி நடத்துவதற்கு தேவையான அனைத்து கட்டமைப்புடன் கட்டிய மாற்று இடம் தேர்வு செய்யும் பட்சத்தில், மேற்படி WASH பயற்சி மையத்தினை தேர்வு செய்யலாம் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

26/2/2022

மாவட்ட ஆட்சியருக்காக,
கடலூர்.

26/2/22

# தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் - சரிபார்ப்பு படிவம்

தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பெயர் : WASH - NGO

பயிற்சி மையம் அமைந்துள்ள இடம் : VADALUR _ 607301.

| வ. எண். | விவரம் | | ஆம்/இல்லை |
|---|---|---|---|
| 1 | தன்னார்வலர்கள் 30 நபர்களுக்கு பயிற்சி அளிக்க இடம் வசதி உள்ளனவா? | : | ஆம் |
| 2 | பயிற்சியில் கலந்துகொள்பவர்களுக்கு இருக்கை வசதிகள் மற்றும் எழுதுவதற்கும், குறிப்பு எடுப்பதற்கும் வசதிகள் உள்ளனவா? | : | ஆம் |
| 3 | செய்முறை மேற்கொள்வதற்கான பயிற்சி அறை உள்ளனவா? | : | ஆம் |
| 4 | செய்முறை மேற்கொள்வதற்கான நீச்சல் குளம் உள்ளனவா? | : | — |
| 5 | குறைந்தபட்சம் 8 பயிற்றுநர்கள் உள்ளனரா? | : | ஆம் |
| 6 | அனைத்து பயிற்றுநர்களும் முன் அனுபவம் பெற்றவர்களா? | : | ஆம் |
| 7 | பேரிடர் காலங்களில் பயன்படுத்தப்படும் மீட்பு உபகரணங்கள் உள்ளனவா? | : | ஆம் |
| 8 | பயிற்சிக்கான உபகரணங்கள் மற்றும் உப பொருட்கள் உள்ளனவா? | : | ஆம் |
| 9 | தன்னார்வலர்கள் 30 நபர்கள் மற்றும் பயிற்றுநர்கள் தங்குவதற்கு ஏற்ற வசதி உள்ளனவா? | : | ஆம் |
| 10 | 10' x 15' அளவுள்ள குறைந்தபட்சம் 12 அறைகள் உள்ளனவா? | : | — |
| 11 | நூலக வசதிகள் இருக்கின்றனவா? | : | — |
| 12 | ஒத்திகை பயிற்சி நடத்த வசதியான இடம் உள்ளதா? | : | ஆம் |
| 13 | CCTV & Biometric வசதிகள் உள்ளதா? | : | ஆம் / வாடகை |
| 14 | பயிற்சி நிறுவனம் சொந்த கட்டிடத்தில் அல்லது வாடகை கட்டிடத்தில் இயங்குகிறதா? வாடகை எனில் வாடகை ஒப்பந்தத்தின் நகல் சமர்ப்பிக்கப்படவேண்டும். | : | ஆம் / வாடகை |
| 15 | பயிற்றுநர்களின் சுயவிவரம் கொண்ட தொகுப்பு சமர்ப்பிக்கவேண்டும். | : | ஆம் |
| 16 | ஆண்கள்/பெண்கள் கழிவறை வசதி உள்ளனவா? | : | ஆம் |
| 17 | போதிய வசதிகளுடன் கூடிய சமையல் அறை மற்றும் உணவு உண்பதற்கான அறை வசதி உள்ளதா? | : | ஆம் |
| 18 | தேவைப்படும் நேர்வுகளில் உள்ளூர் மருத்துவமனைகளில் சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா? | : | ஆம் |
| 19 | குறிப்பு : | | — |

For WASH Thondu Niruvanam

கையொப்பம் [signature] 25/02/22

(E. SELVAVAGANAPATHY)
Director

அலுவலக முத்திரை :

# தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் - சரிபார்ப்பு படிவம்

தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பெயர் : WASH - NGO

பயிற்சி மையம் அமைந்துள்ள இடம் : VALADUR - 607301

புலப்பார்வையிட்ட அலுவலர் : வே. செந்தில்வேலர் புலப்பார்வை நாள் : 25.02.2022
வட்டாட்சியர் - பேரிடர் மேலாண்மை

| வ. எண். | விவரம் | | ஆம்/இல்லை |
|---|---|---|---|
| 1 | தன்னார்வலர்கள் 30 நபர்களுக்கு பயிற்சி அளிக்க இடம் வசதி உள்ளனவா? | : | ஆம். |
| 2 | பயிற்சியில் கலந்துகொள்பவர்களுக்கு இருக்கை வசதிகள் மற்றும் எழுதுவதற்கும், குறிப்பு எடுப்பதற்கும் வசதிகள் உள்ளனவா? | : | இல்லை |
| 3 | செய்முறை மேற்கொள்வதற்கான பயிற்சி அறை உள்ளனவா? | : | போதுமான அளவு இல்லை. |
| 4 | செய்முறை மேற்கொள்வதற்கான நீச்சல் குளம் உள்ளனவா? | : | கட்டிடத்தில் இல்லை |
| 5 | குறைந்தபட்சம் 8 பயிற்றுநர்கள் உள்ளனரா? | : | ஆம் |
| 6 | அனைத்து பயிற்றுநர்களும் முன் அனுபவம் பெற்றவர்களா? | : | — |
| 7 | பேரிடர் காலங்களில் பயன்படுத்தப்படும் மீட்பு உபகரணங்கள் உள்ளனவா? | : | — |
| 8 | பயிற்சிக்கான உபகரணங்கள் மற்றும் உப பொருட்கள் உள்ளனவா? | : | — |
| 9 | தன்னார்வலர்கள் 30 நபர்கள் மற்றும் பயிற்றுநர்கள் தங்குவதற்கு ஏற்ற வசதி உள்ளனவா? | : | இல்லை |
| 10 | 10’ x 15’ அளவுள்ள குறைந்தபட்சம் 12 அறைகள் உள்ளனவா? | : | இல்லை |
| 11 | நூலக வசதிகள் இருக்கின்றனவா? | : | இல்லை |
| 12 | ஒத்திகை பயிற்சி நடத்த வசதியான இடம் உள்ளதா? | : | கட்டிடத்தில் இல்லை |
| 13 | CCTV & Biometric வசதிகள் உள்ளதா? | : | கட்டிடத்தில் இல்லை. |
| 14 | பயிற்சி நிறுவனம் சொந்த கட்டிடத்தில் அல்லது வாடகை கட்டிடத்தில் இயங்குகிறதா? வாடகை எனில் வாடகை ஒப்பந்தத்தின் நகல் சமர்ப்பிக்கப்படவேண்டும். | : | வாடகை |
| 15 | பயிற்றுநர்களின் சுயவிவரம் கொண்ட தொகுப்பு சமர்ப்பிக்கவேண்டும். | : | ஆம். |
| 16 | ஆண்கள்/பெண்கள் கழிவறை வசதி உள்ளனவா? | : | போதுமானதாக இல்லை. |
| 17 | போதிய வசதிகளுடன் கூடிய சமையல் அறை மற்றும் உணவு உண்பதற்கான அறை வசதி உள்ளதா? | : | இல்லை. |
| 18 | தேவைப்படும் நேர்வுகளில் உள்ளூர் மருத்துவமனைகளில் சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா? | : | ஆம். |
| 19 | குறிப்பு : | | |

கையொப்பம் : Senthil 25/2/22

Tahsildar (DM)
Collector Office, Cuddalore

அலுவலக முத்திரை :